**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 43** *2021* Cw 44/2021

2024- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08– ஆம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ராமசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | நன்னை | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 58/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. நல்லப்பன் உடையார் எனது பெரியப்பா, ராமசாமி எனது அப்பா என்றால் சரிதான். பெருமாள் படையாச்சி எனது சித்தப்பா ஆவார். பெருமாள் படையாச்சியின் மகன்கள் சின்னு மற்றும் பெரியசாமி என்றால் சரிதான். எனது அப்பா, பெரியப்பா மற்றும் சித்தப்பா இடையே பாகபிரிவினை ஏற்பட்டதாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் படி ஏ அயிட்ட சொத்து எனது பெரியப்பாவிற்கு, பி அயிட்ட சொத்து எனது அப்பாவிற்கும் சி அயிட்ட சொத்து எனது சித்தப்பாவிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி Ex.B1 பாக பத்திரத்தில் 11-வது பக்கத்தில் சர்வே எண் 165/13 ல் கீழ்புறம் ஓரமாய் இருக்கும் ஓடையில் இருந்து மேற்புறம்நோக்கி வடபுறமாய் தென்வடல் ஜாதியடி 135X5 நீள அகலமும் வடபுற ஓரத்தில் மேற்புறமாய் தென்வடல் ஜாதியடி 121X5 நீள அகலமும் உள்ள மாமூல் வாய்க்கால் வழியாய் ஓடை துலை பாசன ஜலம் ஆள், ஆடு, மாடுகள் சகிதமாய் மேற்படி பி ஷெட்யூல் பாகஸ்தர்காளகிய ராமசாமி நிலத்திற்கு மாமூல் படி 2 நபரும் நடந்து அனுபவித்துக்கொள்வதை 3 நபர் எவ்வித இடைஞ்சலும் செய்யாமல் 2 நபர் அனுபவித்துக்கொண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எங்களுக்கு பிரிந்த பாக பத்திரத்தின் படி எங்களக்கு பிரிந்த சொத்துக்களுக்கு எனது அப்பா பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 44/2021 ல் சர்வே எண். 165/13 ல் உள்ள 66 சென்ட் பெருமாள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். சர்வே எண். 165/11 ல் 68 சென்டில் வடபுறம் எனக்கும் தென்புறம் பெருமாளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 165/11 ல் பெருமாளுக்கு பிரிந்த பாகம் 165/11 பி என சப் டிவிசன் ஆகியுள்ளது என்றால் சரிதான். எனக்கு பிரிந்த சர்வே எண். 165/11 ஏ விற்கும் தாவா பி அட்டவணை சொத்தான அரசு

புறம்போக்கு நிலத்திற்கும் இடையில் பெருமாள் பாக சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கான 44/2021 ல் என்னுடன் சேர்ந்து பெருமாளோ அல்லது அவரது வாரிசுகளோ தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் இல்லை.

4. அசல் வழக்கு எண். 43/2021 ல் தாவா பி அட்டவணை சொத்திற்கு மேற்புறம் எனக்கு எந்தவிதமான சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பிரிந்த சர்வே எண். 165/12 பி மற்றும் 165/9 சி இரண்டு நிலத்திற்கும் ஒட்டியதுபோல் சுமார் 30 அடி அகலமுள்ள வாரி உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பா நல்லப்பன் மேற்படி வாரி வழியாகதான் சென்று வருகிறார் என்றால் சரிதான். நல்லப்பன் என்பவருக்கு பிரிந்த சர்வே எண். 165/12 ல் வடபுறம் எனக்கு 28 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தான் கிணறு உள்ளதா என்றால் இல்லை. அது சர்வே எண். 165/11 ஏ ல் உள்ளது. சர்வே எண். 165/11 ஏ-ல் கிணறு உள்ளது என்பது பொருத்து வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. சர்வே எண். 165/9 சி நிலம் மற்றும் சர்வே எண் 165/12 பி ஆகியவற்றின் மேற்கு பகுதியில் வாரி உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி வாரியை தான் வழிநடையாகவும் ஆடு, மாடு ஓட்டிகொண்டு கனரக வாகனங்களை இயக்கி கொண்டும் இதுநாள் வரை பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பெருமாள் மகன் சின்னுவிற்கு எவ்வளவு இடம் உள்ளது என்றால் 1 ஏக்கர் 5 செண்ட் எனக்கு பாகம் பிரிந்தது போல் அவருக்கும் பிரிந்துள்ளது. சின்னு இந்நீதிமன்றத்தில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCumJMCourt Kunnam